# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

## பாடம் –5

## தேவனுடைய தெய்வீக திட்டம்

# முப்பெரும் காலப் பிரிவுகள்



## மூன்றாம் காலப் பிரிவு

Bible Research and Study Centre

# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

## முப்பெரும் காலப் பிரிவுகள்

## மூன்றாம் காலப் பிரிவு

கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பான சகோதர சகோதரிகளே,

கடந்த பாடத்தில் இரண்டாம் உலகம் பற்றி மிகவும் விரிவாக ஆராய்ந்தோம். இவ்விதழில் மூன்றாம் உலகம் பற்றி அறிந்துகொள்ள முற்படலாம்.

பேதுரு அப்போஸ்தலன் மூன்று உலகங்கள் பற்றி **2பேதுரு 3:5-7 மற்றும் 13இல்,**

**வசனம் 5இல், 'பூர்வ காலத்தில் தேவனுடைய வார்த்தையினாலே வானங்களும், ஜலத்தினின்று தோன்றி ஜலத்தினாலே நிலைகொண்டிருக்கிற பூமியும் உண்டாயினவென்பதையும்"**

**வசனம் 6இல், 'அப்பொழுது இருந்த உலகம் ஜலப்பிரளயத்தினாலே அழிந்ததென்பதையும் மனதார அறியாமலிருக்கிறார்கள்"**

**வசனம் 7இல்,'இப்பொழுது இருக்கிற வானங்களும் பூமியும் அந்த வார்த்தையினாலே அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டு, தேவபக்தியில்லாதவர்கள் நியாயந்தீர்க்கப்பட்டு அழிந்துபோகும் நாள்வரைக்கும்காக்கப்பட்டிருக்கிறது"**

**வசனம் 13இல், 'அவருடைய வாக்குத்தத்தத்தின்படியே நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்களும் புதிய பூமியும் உண்டாகுமென்று காத்திருக்கிறோம்"**

என்று மிகவும் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். இதில் வசனம் 13இல், மூன்றாம் உலகம் பற்றி அவருடைய வாக்குத்தத்தப்படியே நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்களும், புதிய பூமியும் உண்டாகுமென்று காத்திருக்கிறோம்.

நாம் ஏற்கனவே நன்கு அறிந்திருக்கிறபடி, புதிய வானங்கள் எனும்போது கிறிஸ்துவும் அவருடைய சபையாகிய சரீரம் அல்லது பரிசுத்தவான்களின் கண்ணுக்குத்தெரியாத ஆவிக்குரிய நீதியான அரசாட்சியும், புதிய பூமி என்பது பூமியின் அரசாட்சிக்குத் தேவையான அரசியல், மதம், பொருளாதாரம் மற்றும் சமுதாயம் போன்ற நான்கு தூண்களின்மேல் கண்ணுக்குத் தெரிகிற மனிதரின் (முற்பிதாக்கள்) நீதிநியாயமான அரசாட்சியையும் குறிக்கிறது.




அன்பானவர்களே, பொதுவாக இன்று நாம் கேட்கும் பிரசங்கங்களில், இந்த மூன்றாம் நன்மை செய்தவர்கள் மோட்சத்திற்கும் தீமை செய்தவர்கள் நரகத்திற்கும் சென்றுவிடுவார்கள் என்ற விசுவாசம் அநேகரிடையே இருப்பதால், இந்த இராஜ்யம் பற்றி யாரும் தெளிவாக தேவனுடைய வேதத்திலிருந்து அறிந்துகொள்ள முற்படுவதில்லை.

மூன்றாம் உலகத்தில் இரண்டு பிரிவுகள் உள்ளது.

1. **கிறிஸ்துவின் 1000 வருட அரசாட்சி (Christ's thousand year reign)**
2. **முடிவில்லாத தேவனுடைய யுகா யுகங்கள்(Ages to come).**

இவ்விரு பிரிவுகளில், கிறிஸ்துவின் 1000 ஆண்டு ஆட்சிபற்றி மிகவும் தெளிவாக நாம் புரிந்துகொள்ளும்வகையில் வேதத்தில் அநேக வசனங்களை தேவன் தந்திருக்கிறார். ஆனால் 1000ம் ஆண்டு முடிவுக்குப்பின்னர் வரும் காலங்கள் பற்றி சில விஷயங்கள் தவிர, முழுமையும் தற்போது தரப்படவில்லை. இப்போது, நாம் மூன்றாம் உலகின் முதல் பிரிவாகிய 1000ம் ஆண்டு ஆட்சிக்குச் செல்வோமா !

## 1. கிறிஸ்துவின் 1000 வருட அரசாட்சி (Christ's thousand year reign)

ஆயிரவருடத்தின் ஆரம்பமே உடனடியாக ஜனங்களுக்கு விமோசனமானகாலமாக இல்லாமல், அது 2ம் உலகத்தை முடிவுக்குக் கொண்டுவரும் மகா உபத்திரவக்காலமாக ஆரம்பிக்கும் **(மத்தேயு 24:21)** .எவ்வாறெனில் இவ்வுலகம் சாத்தானின் ஆட்சியின் கீழ் இருப்பதால்,கிறிஸ்து தனது இரண்டாம் வருகையில் வரும்-போது சாத்தான் தானாகவே முன்வந்து இவ்வுலகை கிறிஸ்துவின் கரங்களில் ஒப்படைப்பான்? இல்லை. மாறாக அதை அவனிடமிருந்து பிடுங்க






வேண்டும் என்பதே நிதர்சனமான உண்மை.

**மத்தேயு 12:29இல், நமது கர்த்தர், 'அன்றியும் பலவானை முந்திக் கட்டினாலொழிய பலவானுடைய வீட்டுக்குள் ஒருவன் புகுந்து அவன் உடைமைகளை எப்படிக் கொள்ளையிடக்கூடும்?"**

இங்கு பலவான் என்பது சாத்தானையும், வீடு என்பது இப்பூவுலகையும், உடைமைகள் என்பது குறிப்பாக சாத்தானின் ஆட்சி அமைப்புக்களாகிய அரசியல், மதம், பொருளாதாரம் மற்றும் சமூக அமைப்புக்களைக் குறிக்கிறது. சாத்தானை முதலில் கட்டவேண்டுமெனில், கர்த்தருக்கு ஒரு நொடிப்பொழுது போதுமானதாயினும், தேவனுடைய திட்டத்தில் இது ஒரு காலப்பகுதியை உள்ளடக்கினதாயிருக்கிறது. வேதத்தில் **'கர்த்தருடைய நாள்", 'பயங்கரமான நாள்", 'அது மப்பும் மந்தாரமுமான நாள்", 'கர்த்தருடைய நாளை விரும்புகிறவனுக்கு ஐயோ", 'மகா உபத்திரவக் காலம்" 'பழிவாங்கும் நாள்" மற்றும் அர்மெகதோன்"** என்றெல்லாம் வாசிக்கிறோமே. மேற்சொன்ன கர்த்தருடைய நாள் பற்றி விரிவாக பின்னர் ஆராயலாம். ஆனால் சாத்தானை கர்த்தர் கட்டும்போது, பூமியில் மிகப்பெரிய உபத்திரவம், கலக்கம், சோர்வு, பயம், மரணம் நேரிடும்**(லூக்கா 21:26, ஏசாயா 34:1-3, யோயேல் 2:2, சங்கீதம் 110:1-6)** என்பதை மனதில் கொள்ளவேண்டும். ஏன் கர்த்தர் ஆசீர்வாதங்களுக்குப் பதிலாக, மகா உபத்திரவக்காலத்தை தம் இராஜ்யத்தின் முதல் பாகத்தில் வைத்துள்ளார்? ஏனெனில், சாத்தானின் கீழிருக்கும் அநீதியான ஆட்சி அமைப்புக்கள் முற்றிலும் அகற்றப்படவேண்டும் என்பதே அதன் நோக்கம்.அதன்பின்பே பூமியின் மனுக்குலத்திற்கு ஆசீர்வாதக் காலங்கள் ஆரம்பமாகும் என அவரது வசனங்கள் மூலம் , தேவனுடைய தெய்வீக திட்டத்தை தெளிவாக அறிந்துகொள்ளவேண்டும்.

இதையே பேதுரு அப்போஸ்தலன்,

**2பேதுரு 3:7இல்,'இப்பொழுது இருக்கிற வானங்களும் பூமியும் அந்த வார்த்தையினாலே அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டிருக்கிறது"** .

இங்கு அக்கினி என்பது மகா உபத்திரவக்காலத்தில் முற்றிலும் முழுமையாக அழியப்போகும் சாத்தானின் ஆட்சிஅதிகாரங்களேஆகும்.



**ஏசாயா 24: 1-4, 19-20ல், 'தேசம்(பூமி) நொறுங்கவே நொறுங்கும்,தேசம் முறியவே முறியும், தேசம் அசையவே அசையும். வெறித்தவனைப்போல தேசம் தள்ளாடி, ஒரு குடிலைப்போலப் பெயர்த்துப் போடப்படும். இனி எழுந்திராது"** என வாசிக்கிறோம்.

**2பேதுரு 3:10இல், "கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும். அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம்"**

இங்கு வானங்கள் என்பது சாத்தானும், அவனுடைய தூதர்களின் ஆட்சியும், பூதங்கள் என்பது அதே அரசியல், பொருளாதாரம், மதம், சமூகம், இவைகளைக் குறிக்கிறது.

ஆனால் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இவ்வுலகில் மனிதனாக வந்தபோது தந்த எல்லா பிரசங்கங்களும் பரலோக ராஜ்யம் அல்லது தேவனுடைய ராஜ்யம் பற்றியே இருந்ததை நாம் கவனிக்க வேண்டும். கர்த்தர் தம்முடைய ஜெபத்தில்,

**மத்தேயு 6:10இல், 'உம்முடைய ராஜ்யம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக என்று கற்றுக்கொடுத்தாரே".** இன்று கிறிஸ்தவர்களால் 2000 வருட காலமாக, இந்த ஜெபம் தவறாமல் செய்யப்பட்டுவருகிறதே, ஆனாலும் இந்த இராஜ்யம் பற்றி முழுவதுமாக அறிந்திருக்கிறோமா?

மூன்றாம் உலகம்



**2பேதுரு 3:13** இல், **'நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்களும், புதிய பூமியும்"** என்று சொல்லும்போது, அநேகர் இப்போதிருக்கிற 2ம் உலகம் திடீரென்று முடிவுக்கு அல்லது அழிவுக்குள்ளாகி , பின் 3ம் உலகம் உடனடியாக உலகின் ஜனங்கள் அனைவருக்கும் விமோசனம் தரும் உலகமாயிருக்கும் என நம்புகின்றனர். தேவதிட்டத்தில் அவ்வாறு உள்ளதா என உறுதிசெய்யவேண்டும். அன்பானவர்களே, வரைபடத்தில் இரண்டாம் உலகம் இன்னும் முடிவுக்கு வருவதற்கு முன்னமே மூன்றாம் உலகம் ஆரம்பித்திருப்பதை கவனிக்கவேண்டும். இந்த இடைப்பட்ட காலப்பகுதியே வேதாகமத்தில் மகா உபத்திரவக் காலம் என அழைக்கப்படுகிறது. இதே காலப்பகுதியில் இன்னும் அநேகக் காரியங்கள் நிகழ்ந்தேறவேண்டும்.

இந்த இடைப்பட்ட காலப்பகுதியில், கிறிஸ்துவின் வல்லமையுள்ள அதிகாரத்தில் நான்கு தூண்களும் முற்றிலும் அழிந்துவிடும். ஏனெனில் இந்த நான்கு பிரிவுகளிலும் அநீதி, அநியாயம் நிறைந்துள்ளது. இவைகள் ஒவ்வொன்றிற்கும் கர்த்தர் அழிவை எவ்வாறு ஏற்படுத்துகிறார் என்பது மிகவும் ஆச்சரியமான விஷயம். இது பற்றி, அர்மகெதோனும் உலகத்தின் முடிவும் என்ற பாடத்தில் விளக்கமாக அறியலாம். இதுபற்றி நமது கர்த்தர் கூறும்போது,

**மத்தேயு 24:22ல்,'அந்நாட்கள் குறைக்கப்படாதிருந்தால் ஒருவனாகிலும் தப்பிப்போவதில்லை, தெரிந்துகொள்ளப்பட்டவர்களினிமித்தமோ அந்த நாட்கள் குறைக்கப்படும்"**

இதிலிருந்து இந்த இரண்டாம் உலக முடிவில் உலகின் எல்லா ஜனங்களும் முற்றிலும் அழிவதில்லை என்பது நிச்சயமாகிறது. மேலும், இக்கருத்தினை உறுதிசெய்யும்விதமாக,

**செப்பனியா 3:8,9இல்,'பூமியெல்லாம் என் எரிச்சலின் அக்கினியினாலே அழியும். அப்பொழுது ஜனங்களெல்லாரும் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு "** என வாசிக்கிறோம்.



பூமியெல்லாம் அழிந்தபின்பு ஜனங்கள் எல்லாரும் கர்த்தரை தொழுதுகொள்ளுவார்கள்- எவ்வாறு?

**சகரியா 12:2-3இல், ‘இதோ, சுற்றிலும் இருக்கிற எல்லா ஜனங்களுக்கும் நான் எருசலேமைத் தத்தளிப்பின் பாத்திரமாக்குகிறேன். அந்நாளிலே நான் எருசலேமைச் சகல ஜனங்களுக்கும் பாரமான கல்லாக்குவேன்”**

**சகரியா 14:2,3 இல், ‘எருசலேமுக்கு விரோதமாக யுத்தம்பண்ணச் சகல ஜாதிகளையும் கூட்டுவேன். கர்த்தர் புறப்பட்டு, யுத்தநாளிலே போராடுவதுபோல அந்த ஜாதிகளோடே போராடுவார்”.**

இவ்விதமாக, 2ம் உலகின் கடைசி அழிவை எருசலேமை மையமாக வைத்து தேவன் வரவிடுகிறார். ஆச்சரியவிதமாக தேவன் எருசலேமை அதின் எல்லா விரோதிகளிடமிருந்தும் பாதுகாக்கும்போது,

**சகரியா 14:16இல்,’ பின்பு எருசலேமுக்கு விரோதமாக வந்திருந்த எல்லா ஜாதிகளிலும் *மீதியான யாவரும்* சேனைகளின் கர்த்தராகிய ராஜாவைத் தொழுதுகொள்ளும்படிக்கும், கூடாரப்பண்டிகையை ஆசரிக்கும்படிக்கும், வருஷாவருஷம் வருவார்கள்”.**

இவ்வசனத்திலும்கூட மீதியான யாவரும் என்கிற வார்த்தையை கவனிக்கும்போது, உலகின் அனைத்து மக்களும், முற்றிலும் அழிவதில்லை என்பது உறுதியாகிறது. மேலும் தற்காலத்தில் உலகம் முழுவதும் எருசலேமைப் பற்றி மட்டுமே பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகிறதை நாம் காணும்போது, எந்தக் காலத்தில் நாம் இருக்கிறோம் என்பதை யோசிக்கவேண்டும்.

**சகரியா 8:22,23இல்,’அநேக ஜனங்களும் பலத்த ஜாதிகளும் எருசலேமிலே சேனைகளின் கர்த்தரைத் தேடவும், கர்த்தருடைய சமூகத்திலே விண்ணப்பம்பண்ணவும் வருவார்கள். புறஜாதியாரில் பத்து மனுஷர் ஒரு யூதனுடைய வஸ்திரத்தொங்கலைப் பிடித்துக்கொண்டு, தேவன் உங்களோடே இருக்கிறார் என்று கேள்விப்பட்டோம். ஆகையால் உங்களோடே கூடப் போவோம் என்பார்கள்”.**

இவ்விதமாகத்தான் உலகின் எல்லா ஜனங்களும் இஸ்ரயேலின் கர்த்தரைத் தேடுவார்கள் எனப் பார்க்கிறோம்.

**ஏசாயா 17:7,8இல்,’ அக்காலத்திலே மனுஷன் தன்கைகளின் கிரியையாகிய பீடங்களை நோக்காமல், தன் விரல்கள் உண்டுபண்ணின தோப்புவிக்கிரகங்களையும், சிலைகளையும் நோக்காமலும், தன்னை உண்டாக்கினவரையே நோக்குவான். அவன் கண்கள் இஸ்ரயேலின் பரிசுத்தரையே நோக்கிக்கொண்டிருக்கும்” .**

இவ்வாறு தேவனுடைய இராஜ்யம் இஸ்ரயேலில் துவங்கி, பூமி முழுவதும் பரவி, கிறிஸ்துவின்

ஆட்சியின் கீழ்வரும். பின்பு ஏற்கனவே மீதியான ஜனங்கள் இருக்கும்போதே முதன்முதலில் பூமியில் இஸ்ரயேலில் முற்பிதாக்களின் உயிர்த்தெழுதல் நடைபெறும்.

**எபிரேயர் 11:35 இல், 'வேறு சிலர் மேன்மையான உயிர்த்தெழுதல் அடையும்படி"**
இங்கு மேன்மையான உயிர்த்தெழுதல் எதுவெனில், ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, தாவீது, மோசே, சாமுயேல், தானியேல், யோசேப்பு, யோவான்ஸ்நானகன் போன்ற இன்னும் அநேக விசுவாச வீரர்களை(எபிரேயர் 11ம் அதிகாரம் முழுவதும்) தேவன் ஏற்கனவே யூதயுகத்தில், பூமிக்குரிய இராஜாக்களாக தகுதியாக்கினதினிமித்தம், உயிர்த்தெழும்போதே ***பரிபூரண மனிதர்களாக வாலிபர்களாக*** எழுந்துவருவார்கள். இதுவே மற்ற மனிதரைக் காட்டிலும் மேன்மையான உயிர்த்தெழுதல் என்பதாகும். இவர்கள் கர்த்தருடைய நாளில் உயிர்த்தெழுந்து வரும்வரை இப்பூமியின் தூளில் இருப்பர். பெந்தேகொஸ்தே நாளில் அப்போஸ்தலர் பேதுருவுடைய வார்த்தையை கவனிக்கும்போது, இவர்கள் பரலோகம் சென்றுவிட்டதாக இல்லை

**அப் 2:29, 34 - 'தாவீது பரலோகத்துக்கு எழுந்துபோகவில்லையே . இதையே கர்த்தர் கூறும்போது, யோவான் 3:13இல், பரலோகத்திலிருந்து இறங்கினவரும்... மனுஷகுமாரனேயல்லாமல் பரலோகத்துக்கு ஏறினவன் ஒருவனுமில்லை".** மேலும் அப்போஸ்தலர் பவுல் **1கொரிந் 15:20இல், 'கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்து எழுந்து, நித்திரை அடைந்தவர்களில் முதற்பலனை அடைந்தார்".** மேற்கண்ட வசனங்களில் எவ்விதத் தவறும் இருக்க வாய்ப்பில்லை. அவ்வாறிருக்க, எலியா பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது, ஆபிரகாம் மடியில் லாசரு இருப்பது, ஏனோக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது போன்ற சம்பவங்கள் வேதாகமத்தில் உள்ளதே. அது குறித்து நமது தொடர் வகுப்புகளில் தெளிவாக்கிக்கொள்ளலாம்.

முற்பிதாக்களைக் குறித்துக் கூறும்போது,
**சங்கீதம் 45:16இல், - 'உமது பிதாக்களுக்குப் பதிலாக உமது குமாரர் இருப்பார்கள், அவர்களைப் பூமியெங்கும் பிரபுக்களாக வைப்பீர்".** எப்படியெனில், இயேசு **யோவான் 5:28இல்** கூறும்போது **,**

**' இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்படவேண்டாம். ஏனென்றால் பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும்"**
இவர்களின் உயிர்த்தெழுதல் இஸ்ரயேல் நாட்டின் உள்ளேயே நடைபெறும். பின் இச்செய்திகள் உலகம் முழுவதும் பரவும். அப்பொழுது பூமியில் அதாவது,***இஸ்ரயேல் தேசத்தில்*** கண்ணுக்குத்தெரிகிற கிறிஸ்துவின் இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும்.

**சங்கீதம் 72:8இல்,'ஒரு சமுத்திரந் தொடங்கி மறுசமுத்திரம் வரைக்கும், நதி தொடங்கிப் பூமியின் எல்லைகள் வரைக்கும் அவர் அரசாளுவார்"**

**ஏசாயா 2:2-3இல், 'சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்"**

**வசனம் 2இல், 'எல்லா ஜாதிகளும் அதற்கு ஓடிவருவார்கள்"** - அப்போது பூமியில் எல்லோருக்கும் மேலான பிரபுவாக யோவான் ஸ்நானகன் இருப்பார் என்று**மத்தேயு 11:11இல்,**

நமது கர்த்தர் ஏற்கனவே கூறியிருக்கிறார். இவருடைய அலுவலகம் எருசலேமில் இருக்கும் **அக்காலத்திலே எருசலேமைக் கர்த்தருடைய சிங்காசனம் என்பார்கள்(எரேமியா 3:17)** . இதேபோல எல்லாத் துறைகளுக்கும் தேவன் தகுந்த முற்பிதாக்களை நியமிப்பார். உதாரணமாக,

**1. மோசே - சட்டத்துறை 2. தானியேல் - வருமாய்த்துறை 3. யோசேப்பு - உணவுத்துறை**

இவ்வாறாக ஆபிரகாமினிடத்தில் தேவன் அளித்த வாக்குத்தத்தத்தின்படி, வானத்தில் கிறிஸ்துவும் -சபையும் இணைந்த ஆவிக்குரிய ஆட்சியும்(வானத்து நட்சத்திரம் போல் சந்ததி), பூமியில் முற்பிதாக்களின் கண்ணுக்குத் தெரிகிற ஆட்சியும் இணைந்து இஸ்ரயேலில் ஆரம்பிக்கும்போது(கடற்கரை மணலைப்போல் சந்ததி), பூமியின் சகல ஜனங்களுக்கும் அங்கேதான் விமோச்சனமும், ஆசீர்வாதமும் கிடைக்கும். முற்பிதாக்களைத் தொடர்ந்து, இஸ்ரயேலர் உயிர்த்தெழுந்து வருவார்கள்.

**ரோமர் 11:26இல்,'இந்தப் பிரகாரம் இஸ்ரயேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள்"**

பின்பு உலகத்தின் ஜனங்களின் உயிர்த்தெழுதல் நடைபெறும். உலகில் மீதியாயிருக்கிற ஜனங்களின் முந்தைய தலைமுறை என ஆரம்பித்து, பின்நோக்கிச்சென்று, கடைசியாக ஆதாம் வரை உயிர்த்தெழுதல் நடைபெறும். கர்த்தர் இதுபற்றிக் கூறும்போது, **'முந்தினோர் பிந்தினோராயும், பிந்தினோர் முந்தினோராயும் இருப்பார்கள்"-லூக்கா 13:28-29.** மேலும்,

**ஏசாயா 26:19இல், "மரித்தோரைப் பூமி புறப்படப்பண்ணும்"** என வாசிக்கிறோம்.



உயிர்த்தெழுதலில் நான்குவகை வேதாகமத்தில் உள்ளது பற்றி பின்வரும் பாடத்தில் விரிவாக ஆராய்வோம். உயிர்த்தெழுதலின் நாட்களுக்கு முன்பாக, தேவன் பூமியை முந்தின ஏதேன் தோட்டம்போல் மாற்றுவார்.

**யோயேல் 2:2-3இல், 'அவைகளுக்கு முன்னாகத் தேசம் ஏதேன் தோட்டத்தைப்போல் இருக்கும்"**

**ஏசாயா 35:1,7இல், 'வனாந்தரமும் வறண்ட நிலமும் மகிழ்ந்து.."**



**சங்கீதம் 72:1-9இல்,'வெட்டாந்தரை தண்ணீர் தடாகமாக மாறும்"**

பூமியின் பெரிய பெரிய பாலைவனங்களெல்லாம் (உதாரணம் - சகாரா பாலைவனம் முதலியன) மக்களின் குடியிருப்புக்கு மாற்றப்படும்

**ஓசியா 2:18இல்' அக்காலத்தில் நான்**

**அவர்களுக்காகக் காட்டுமிருகங்களோடும், ஆகாயத்துப் பறவைகளோடும், பூமியிலே ஊரும் பிராணிகளோடும், ஒரு உடன்படிக்கை பண்ணி, வில்லையும் பட்டயத்தையும் யுத்தத்தையும் தேசத்திலே இராதபடிக்கு முறித்து, அவர்களைச் சுகமாய்ப் படுத்துக் கொண்டிருக்கப் பண்ணுவேன்"**

மிருகங்களுக்கும் மனிதர்களுக்கும் பகைமை மாறி அன்பு பெருகும். மொத்தத்தில் மனிதனுக்கு இவ்வுலகில் அடிப்படையாக உள்ள எல்லாப் பிரச்சனைகளும் மாறி, எல்லாவகையிலும் சுபிட்சமான நிலை ஏற்படும். இம்மாறுதல்கள் பற்றியும் பின்பு ஆராய்வோம். ஆயிரவருட அரசாட்சியில் நிகழவிருக்கும் மற்றுமொரு மிக முக்கியமான விஷயத்தை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

**1தீமோத்தேயு 2:4இல்,'எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் தேவன் சித்தமுள்ளவராயிருக்கிறார்"**

இங்கு நாம் பார்க்கும்போது, **இப்போது முதலில் பாவம் செய்து அதன் சம்பளமாகிய மரணத்தைப் பெறுகிறோம். ஆனால் உயிர்த்தெழுதலில் முதலில் மரணத்திலிருந்து இரட்சிப்பு, பின்பு பாவத்திலிருந்து விடுதலைபெறவேண்டும்** . ஏனெனில், இப்போதைய மரணத்தை கர்த்தர் **நித்திரைக்கு** ஒப்பிடுகிறார். ஆகவே உயிர்த்தெழுந்து வரும்போது, அதே பழைய நினைவுகளோடு எழுவார்கள். அப்போது பாவத்திலிருந்து விடுதலைபெற வேண்டுமெனில், கர்த்தருடைய கூற்றுப்படி,

**யோவான் 17:17இல், 'உமது சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்' ,**
**உமது வசனமே சத்தியம்"**




இவ்விதமாக உலகின் எல்லா ஜனங்களும் உயிர்த்தெழுந்தபின்பு, தனித்தனியாக மீண்டும் தேவன் வாய்ப்புத் தந்து சத்தியத்தை அறிந்து, பாவத்திலிருந்து அவர்களாக விடுபடவேண்டும் என்பதே அவருடைய சித்தம். இதையே

**ஏசாயா26:9 இல் 'உம்முடைய நியாயத்தீர்ப்புகள் பூமியிலே நடக்கும்போது பூச்சக்கரத்துக்குடிகள் நீதியைக் கற்றுக்கொள்வார்கள்".**

**ஏசாயா 11:9இல், 'சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல, பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்"**

**ஏசாயா 65:20** இல், ஒவ்வொருவருக்கும் 100 வருடங்கள் தரப்படும். கீழ்ப்படிந்து நடப்பவர்கள்

நித்திய ஜீவனுக்கும், அங்கும் கீழ்ப்படியாத ஜனங்களோ,**ஏசாயா 26:10இல் கூறியுள்ளபடி, துன்மார்க்கனுக்குத் தயை செய்தாலும் நீதியைக் கற்றுக்கொள்ளான். நீதியுள்ள தேசத்திலும் அவன் அநியாயஞ்செய்து கர்த்தருடைய மகத்துவத்தைக் கவனியாதேபோகிறான்"**

இரண்டாம் மரணத்திற்குள் சாத்தானும் அவனுடைய தூதர்களும் **மத்தேயு 25:41இல் கூறியுள்ளபடி, 'பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினிக்கு"** செல்வார்கள். இதையே வேதம் நியாயத்தீர்ப்பின் நாளாக சொல்கிறது. நியாயத்தீர்ப்பு பற்றியும் தனிப்பாடமாக ஆராயவேண்டும்.

இவ்விதமாக கிறிஸ்துவின் ஆயிரமாண்டு ஆட்சியில் எல்லாவற்றையும் முந்தின சீருக்குக்கொண்டுவந்து, பரிகரிக்கப்படும் கடைசி சத்துருவான மரணத்தையும் நீக்கி, ஒரு கீழ்ப்படிதலுள்ள சந்ததி ஏற்படும்-

**மல்கியா 2:15இல், 'அவர் ஒருவனையல்லவா படைத்தார், ஆவி அவரிடத்தில் பூரணமாயிருந்ததே, பின்னை ஏன் ஒருவனைப் படைத்தார், தேவபக்தியுள்ள சந்ததியைப் பெறும்படிதானே. ஆகையால், ஒருவனும் தன் இளவயதின் மனைவிக்குத் துரோகம் பண்ணாதபடிக்கு உங்கள் ஆவியைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்"**

தேவனிடம் ஒப்படைத்து அவருக்குக் கீழ்ப்பட்டிருப்பார் என

**1கொரிந்தியர் 15:24இல், 'அதன்பின்பு முடிவுஉண்டாகும். அப்பொழுது அவர் சகல துரைத்தனத்தையும் சகல அதிகாரத்தையும் வல்லமையையும் பரிகரித்து, தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு ராஜ்யத்தை ஒப்புக்கொடுப்பார்"** என வாசிக்கிறோம்.

## 2. முடிவில்லாத தேவனுடைய யுகாயுகங்கள்

மூன்றாம் உலகின் இந்த இரண்டாவது பிரிவைக்குறித்து, வேதாகமத்தில் சில வசனங்கள் தவிர, முழுவதும் புரிந்துகொள்ளும்படி தற்பொழுது தரப்படவில்லை. ஆனால் வரும்காலங்களில் தேவன் அதனை வெளிப்படுத்துவார். இப்பாகத்தைக் குறித்து வேதாகமத்தில் உள்ள ஒரு வசனத்தை இங்கு தருகின்றோம்.

**வெளி21:4 - 'இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை,வருத்தமுமில்லை, முந்தினவைகள் ஒழிந்துபோயின"** என வாசிக்கிறோம். அந்த மகா சந்தோஷமான நாள் வெகுதூரத்தில் இல்லை. தேவன் தாமே அவர் சத்தத்தைக் கேட்கவும், அவர் சத்தியத்திற்குக் கீழ்ப்படியவும் உங்களுக்கு உதவிசெய்வாராக.

**தேவனுடைய கிருபை நம் அனைவரோடும் இருப்பதாக, ஆமென் !!!**

**இந்த சத்தியங்களை பற்றி மேலும் அறிந்து கொள்ள தொடர்பு கொள்ளவும்:**
For Further Details Please Contact:
bibleresearchandstudy@gmail.com, victorgnanaraj01@gmail.com victor_vicky
+919443321874 https://www.facebook.com/biblereserch/